**34. அநுமான் கதை+(3)**

அநுமான் பேராற்றல் படைத்துவிளங்கினான். ஆயினும் மிகுந்த அடக்கம் உடையவனாக இருந்தான். எத்தகைய பேராற்றலும் பெருந்திருவும்பெற்றவர்களாயினும் அவர்களிடத்தில் அடக்கம்



இல்லையென்றால் அவர்கள் பல வகையான தீமைகட்கு உள்ளாவார்கள். இதனை அநுமான் உள்ளத்திலே கொண்டு அதற்குத் தக்கபடியாக நடந்து கொண்டான். இவனுடைய அடக்கமே இவனுக்கு எல்லாச் சிறப்பையும் ஈந்தது. ஒரு நாள் ஒரு காட்டு வழியில் அநுமான்உட்கார்ந்துகொண்டிருந்தான். இவனுக்கு ஒரு வகையில் உடன் பிறந்தானாகிய வீமன் அவ்வழியே சென்றான். அனுமானுடைய அடக்க ஒடுக்கத்தைக் கண்டு வீமன் ஏமாந்துபோனான். தன்னுடைய பெருமைகளை யெல்லாம்அநுமானிடம் இயம்பினான். எல்லாவற்றையுங் கேட்ட அநுமான் "எல்லாம் சரி தான். என்னுடைய இந்த வாலைமட்டும் தூக்கிச் சிறிது அப்பாற்போடு உன்னுடைய ஆற்றல்களை யெல்லாம் நான்: பார்க்கின்றேன்" என்றான். "இதுதானா ஒரு பெரிய காரி யம்? என்று கூறிவிட்டு வீமன் மிகு எளிதாகப்போய் அநுமா னுடைய வாலைத்தூக்கப் பார்த்தான். எவ்வளவோ முயன்றும் வாலைத் தூக்க முடியவில்லை. இதன் பிறகுதான் அந்தப் பேர்வழிதன் உடன் பிறந்தான் முறையினனாகிய அநுமான் என்று வீமன் உணர்ந்தான். ஒவ்வொருவரும் அடக்கத்தைச்சிறந்த பொருளாக மதித்து அதனை மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். இப்பண்பு அநுமானிடத்தில் நன்கு விளங்கியது.

[அடக்கமுடைமை]

(இராமாயணம்)